
# வித்து
# Core

குறியீட்டு உருவகக் கதைகள்



கவிஞர் ஏ. இக்பால்



இக்பால் தன்
கவிதைகளில்
அனுபவத்தைவிட
அறிவை, கருத்தை,
சிந்தனையை முதன்மைப்
படுத்துபவர்.
அந்தவகையில் இவரது
கவிதைகளில் உணர்வை
விட சிந்தனைக்கனதி
முனைப்பாக இருக்கும்.
புகழ்பெற்ற பாரசீக
சூபிக் கவிஞர்
மௌலானா றூமியின்
"கிதாபுல் மஸ்னவி"யில்
உள்ள கவிதைகள்
சிலவற்றை
மொழிபெயர்த்து
"மௌலானா றூமியின்
சிந்தனைகள்"
(1969) என்ற பெயரில்
இவர் வெளியிட்டார்.

K.Bharaneetharan
EDITOR
'JEEVANATHY'
KALAI AHAM
ALVAI (N.P.)

K.Bharaneetharan
EDITOR
'JEEVANATHY'
KALAI AHAM
ALVAI (N.P.)

# வித்து (CORE)

## கற்பகத்தருக்கள்

| | | |
|---|---|---|
| 1. | முஸ்லிம் கலைச்சுடர் மணிகள் | 1965 |
| 2. | மௌலானா றூமியின் சிந்தனைகள் | 1969 |
| 3. | மறுமலர்ச்சித் தந்தை (சாகித்ய மண்டலப் பரிசு பெற்றது) | 1971 |
| 4. | பண்புயர் மனிதர் பாக்கிர் மாக்கார் | 1990 |
| 5. | நம்பமுடியாத உண்மைகள் | 1992 |
| 6. | கல்வி ஊற்றுக்கண்களில் ஒன்று | 1994 |
| 7. | இலக்கிய ஊற்று | 1996 |
| 8. | மாயத் தோற்றம் | 1998 |
| 9. | புதுமை - The New (வ.கி.மா.ச சாகித்ய பரிசு பெற்றது) | 1999 |
| 10. | பிரசுரம் பெறாத கவிதைகள் | 2000 |

K. Bharaneetharan
EDITOR
'JEEVANATHY'
KALAI AHAM
ALVAI (N.P.)

# வித்து - CORE

(குறியீட்டு உருவகக் கதைகள்)

---

கவிஞர்.ஏ.இக்பால்

■**Title : VITHTHU** (Core) - Metaphorical Story ■**Author:** A. Iqbal, Rifaya Manzil, Dharga Town, Sri Lanka. Tel : 034-5580784. ■**Language :** Tamil ■**Copy Right :** Author ■**No. of pages :** 52 ■**No. of copies :** 500 ■**Edition :** First (July 2007) ■**ISBN :** 978-955-96735-1-4 ■**Publisher :** Pesum Pena, 63, Mosque Road, Beruwala ■**Publication No :** 13 ■**Consept & Artwork :** Jawzy ■**Cover Designers :** Faizal & Jawzy ■**Printed by :** Positive Graphics, 63, Mosque Road, Beruwala. Tel : 034-2276929 ■**Price : RS. 125.00**

## ஒரு விழுதுக்கான
## அர்ப்பணம்

மரணிக்கும் வரை

மனித குலத்தை நேசித்த

**சித்தி மாரிபா ஸாஹிர்**

(பாத்திமா மலீஹாவின் மாமியார்)

அவர்களுக்கே

இந்நூல் அர்ப்பணம்

*நாற்றங்கால்*

---

■இயற்கை ■உறவு ■வலை ■தியாகம் ■விளைவு ■விட்டிலுக்கு ஒரு விளக்கு ■கறையான் புற்றெடுக்க... ■திருப்தி ■அறியாமை ■சுயநலம் ■கருமுகில் ■பணநீதி ■மூட நம்பிக்கை ■கழிவு இல்லை ■குறை ■ஒன்றுதான் பகுத்ததில் பல ருசி ■அவரவர் நிறம்

# முளை வெளிப்படும் முன்னே வித்தை நுணுகிய கருத்துரை

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலகமலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது
ஆகுதல் நூற்கு அழகெனும் பத்தே"

நூலுக்கு அழகு பத்து என நன்னூலார் நமக்கருளியது இது. இதைக் கூர்ந்து கவனிக்கும்போது, உருவகக் கதை அமைப்புக்கே இப்படிச் சொன்னாரா? கவிதை அமைப்புக்குச் சொன்னாரா? என முதலெழுந்து சிந்திக்கத் தூண்டுகின்றதெனலாம். சுருக்கமும் சிக்கனமும் கவிதைக்குரியவைதான். அதே நேரம் உருவகக் கதைகளுக்கும் உரியவைதான்.

உருவகக் கதையை ஆங்கிலத்தில் Metaphorical Story எனக் குறிக்கின்றனர். உவமேயத்தையும் உவமானத்தையும் வேறுபாடில்லாது கூறும் அணி என இதற்கு அகராதி விளக்கம் தருகின்றது. இவ்விளக்கத்துக்கு மூலம் அணி இலக்கணம் தான்.

அணி இலக்கண நூலார் தந்த பொருளணியின் உட்பிரிவில் ஐந்தாவது, உருவக அணி. உவமான உவமேயத்தை ஒற்றுமையாகச் செய்கையினால் ஆரம்பிப்பதே இவ்வணியின் செயல். வடநூலார் இதை ரூபகாலங்காரம் என்பர். உவமான உவமேயங்கள்

பேதமற்று வரும்போது, அதை ஆரோயம் என்பர். இது ஒற்றுமை உருவகம். அடுத்தது, செய்கை உருவகம். இது தத்ரூபமானது. வடநூலார் இவற்றை அபேத ரூபகம் என்றும் தாத்ரூபயரூபகமென்றும் கூறுவர்.

இவ்வித இலக்கணத்துள்ளமைந்ததுதானா உருவகக் கதை? அப்படிக் கூறி, இலக்கணத்துள் தோய்ந்தவராகச் சிவப்பு விளக்கைப் போட்டுக் காட்டும் மரபைச் சிலர் நடித்துக்காட்டியது எனக்கு ஞாபகம் வருகின்றது.

1956களிலிருந்து இலக்கிய வழியில் நடந்து வந்தகாலம் 1960களில் உருவகக் கதை எழுதும் முயற்சியில் ஈடுபடுவதற்கு, வி.எஸ். காண்டேகர், விந்தன், சு.வே,எஸ்பொன்னுத்துரை, அ.ஸ.அப்துஸ்ஸமது போன்றோரின் உருவகக் கதைகள் காரணமாகின. 1961களில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயற்சிக் கலா-சாலையின் எனது ஆக்க வேலை Free work க்காக "கடுகு" எனும் உருவகக் கதைத் தொகுதி யொன்றையே சமர்ப்பித்தேன். அது இலங்கையின் முதலாவது உருவகக் கதை தொகுதி என்ற இடத்தையும் அடையலாம்.

"வித்து" என்னும் இத்தொகுதியில் தொகுக்கப்-பட்டுள்ள இக்கதைகளை உருவகக் கதைகள் என்று கூறமுடியா. உருவக அணியிலக்கணத்துள் இதுகாலவரை வெளியான எந்தவொரு கதையையும் அவ்வமைதிக்குள் எடுபடாதவை என்பது எனது துணிபு. அக்கதைகள் யாவும் குறியீட்டியல் எனும் சிம்போலிஸ Symbolism த்துக்குட்பட்டவைதான். உருவக வரையறை குறியீட்டுள் முழுமையாகும். உருவகமும் குறியீடும் பல சொற்களால் விரித்துக் கூறும் கருத்தைச் சிக்கனப்படுத்துகின்றன. இந்த உத்தி முறை அநேகமாகக் கவிதைக்குரியதே. அதுமட்டு-மல்ல, தமிழ் இலக்கணம் கூறும் நூலுக்குரிய இலக்-கணத்துள்ளும் அமையும். இத்தொகுதியிலுள்ள "உறவு" எனும் கதை, முதலில் கவிதையாகவே பிறந்தது.

நாத மெழுப்பிடும் ஊதுகுழலல்ல
நாவை ருசித்தெழும் பிட்டுக்குழல்
சாதம் சமைத்திடும் பேதையவள்
சார்ந்து கொழுனன் கரமிருந்து

பற்றி யெடுத்தச் சொத்தையகற்றிப்
பற்றுடன் காலை உணவினுக்காய்
இட்டமாய் செய்த பிட்டு அது
இசைவுடன் வடிவம் குழலுருவில்

துண்டுதுண்டா யது புண்டிருக்கத்
துகளெனத் தேங்காய்ப் பூத்துருவல்
நின்றுயிடையிடை ஒன்று படுத்தியே
நிஷ்டையில் பாத்திர மீதமர்த்தி

வந்தவுடனே சொந்த மெனக்கூறி
வந்தது மூங்கில் பிட்டுக்குழல்
உற்றவுறவின னற்ற முறையினில்
உதறியே பேசிற்று புட்டுருவு:

உன்வடி வாக்கினாய் என்னுருவை
உன்னச்சி பெற்றதால் ஏனுறவு?
என்னை விடுத்து நண்ணிவிடுவென
ஏந்திய ஏந்திளை யண்மியதே

இக்கவிதை 1967 பெப்ருவரி 03 இல் "சிந்தாமணி" ஞாயிறு இதழில் வெளியானது. இது குறியீட்டுக் கதையாக 1972 ஏப்ரல் "மணி மஞ்சரி" யில் வெளியானது. இவ்விதம் எனது குறியீட்டுக் கதைகளில் சில, முதலில் கவிதையாகவே பிறந்தன.

குறியீட்டுக் கதைகள் மனித வாழ்க்கை, மனித மனத்திலுள்ள விசித்திரச் சிக்கல்கள் என்பனவற்றை வெளியாக்கி நிற்கின்றன. உலகப் பிரசித்தி பெற்ற ஈஸாப் கதைகள் இறுதியில் படிப்பினை பற்றி விளக்குவதால்

தொய்வடைந்துவிட்டன. ஈஸாப்பின் அறிவியல் ஞானம் அற்புதமானது.

கற்பனைத்திறன், விநோதமாக எழுதும் புலவனுக்குரிய புலமை, தத்துவ ஞானியின் அறிவு என்பன குறியீட்டுக் கதை எழுதுவோருக்குரியவை. வி.எஸ்.காண்டேகருடைய கதையொன்றிது.

**கெட்டிக்கார ஆடு**

குன்றின் பாதையிலே நடுவில் ஒரு பள்ளம். அக்கம் பக்கத்திலுள்ள பசிய இலைகளை நோக்கிக் கொண்டே செல்லும் ஆடுகள் அதை எவ்வாறு கவனிக்கும்?

எல்லாவற்றுக்கும் முன்னே சென்ற ஆடு, கால் தவறிப் பள்ளத்தில் விழுந்தது. "இந்தப் பள்ளத்தில் ஏதோ ஒரு விசேஷம் இருக்க வேண்டும். நாம் முன்பின் பாராமல் இதில் விழுவதே சரி" என்று நினைத்தன அதன் பின்னே வந்த ஆடுகள்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து...... பள்ளம் நிரம்பிக் கொண்டே வந்தது. கடைசி ஆடு ஓடி வந்தது. ஆனால், பள்ளம் நிறைந்து விட்டபடியால், அது மற்றுமுள்ள ஆடுகளின்மீது விழுந்து புரண்டு கொண்டே பள்ளத்தைக் கடந்து அப்புறம் சென்றது. பின்னால் திரும்பி மற்ற ஆடுகளை நோக்கி "மூடர்களே! வழியிலுள்ள பள்ளங்கூடவா உங்கள் கண்ணில் படவில்லை?" என்று அது கேட்டது.

யதார்த்தப் பண்பு எவ்விதம் சிந்தனையைத் தூண்டுகின்றதென்பதை இக்கதை உணர்த்தி நிற்கின்றது. விந்தனுடைய **"வாலும் தலையும்"** எனும் இக்கதையைப் பாருங்கள்.

ஒரு நாள் நாயிடம், "உன்னைக் கண்டால் எனக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்குக் கூடப் பொறாமையாயிருக்கிறது" என்றது பூனை.

"ஏனாம்?" என்று கேட்டது நாய்.

"வாலை ஆட்டியாட்டிக் காட்டியே நீ பிழைத்துக் கொள்கிறாயல்லவா?" என்றது பூனை சிரித்துக் கொண்டே.

நாய் அதைத் திருப்பிக் கேட்டது.

"மனிதர்களில் சிலர் தலையை ஆட்டியாட்டிக் காட்டியே பிழைத்துக் கொள்கிறார்களே, அதற்கென்ன சொல்லுகிறாய், நீ?"

பூனை வாயைத் திறக்கவில்லை.

பனித்துளியில் வானம் தென்படுவது போல் இக்கதைகளுள் மனித வாழ்க்கையின் பற்பல உருவங்களின் நிழல்கள் தென்படுவதைக் காணலாம். கருத்துக்குக் கலை வடிவம் கொடுக்கும் குறியீடு கதையாகி வானளாவி நிற்பதை இதில் காணலாம். நேர்த்தியான இவ்வுருவம் இன்று கைவிடப்பட்டதோ என்றெண்ணத் தோன்றும். ஆனால், குறியீடுகளடங்கிய கவிதைகளின் வளர்ச்சி மிக உயர்ந்து விட்டதோ எனுமளவு கவிதைகள் வளர்ந்துள்ளன. வானளாவி நிற்கும் குறியீட்டுத் தன்மையை இக்கதைகளில் அளந்து பார்க்க வேண்டுகின்றேன்.

அழகிய அமைப்பில் கவர்ச்சியாக இந்நூலமையக் காரணகர்த்தா "பேசும்பேனா" வின் சொந்தக்காரர் பரீத் ஏ.ஜவ்ஸகிதான், அவருக்கே இதற்குரிய நன்றியை எப்படித் தெரிவிப்பதென கூறமுடியாது தவிக்கிறேன்.

**கவிஞர்.ஏ.இக்பால்**

"றிபாயா மன்ஸில்"

தர்காநகர்

2007

# இயற்கை

உலகம் சூரியனிலிருந்து ஒரு பிளம்பாக விழுந்து, நாட்கள் சென்று குளிர்ச்சியடைந்ததும் மனிதனும் உதித்து விட்டான். ஆனால் சூரியன் உலகத்தைப் பார்க்கவே இல்லை. மனிதனும் ஏதோ பழக்கப்பட்ட இருளிற்றான் வாழ்ந்தான். சூரியன் பல கிரகங்களையும் பார்த்துவிட்டு, உலகத்தையும் பார்ப்பதற்குப் புறப்படுமுன் தம்பி சந்திரனை இடையிற் சந்தித்தான். அண்ணாவைக் கண்ட அப்பாவி சந்திரன் மரியாதைக்காகத் தன் ஒளியை மறைத்து வாய் புதைத்து நின்றான். "தம்பி! உலகம் என்றொரு கிரகமுண்டாமே, நீ பார்க்கவில்லையா"? என்றான் சூரியன். "அண்ணா இதுவரை தாங்கள் போகவில்லை என்பது எனக்குத்தெரியும். எதிர்பாராமல் நானும் நேற்றுப் போனேன். நான் ஒரு கிரகத்திலும் காணாத அதிசயம்; அங்கு வாழும் மனிதனுக்கும் மற்றும் கிரகங்களில் வாழும் மனிதனுக்கும் வேறுபாடுகள் அதிகம். இன்றே தாங்கள் சென்று பாருங்கள்" எனக் கூறிவிட்டுச் சந்திரன் சென்று விட்டான்.

சூரியனும் சுழன்றான். பூமியும் சுழன்றது. சூரியன் உலகத்தின் கிழக்கை நோக்கினான்.

என்ன ஆச்சரியம்! அவனுக்கு இந்த உலகில் முதல் வரவேற்பளித்தவள் - மலர்ந்த முகத்தோடு வரவேற்றவள் தாமரையாள்தான். பெண்களின் மெதுமையான மலர் போன்ற முகத்தையுடைய தாமரையாளில் மயங்கிய சூரியன் தன் பார்வையை உலகிலுள்ள மனிதர்களிற் செலுத்தினான். அவன் கிழக்கிலிருந்து மேற்கு வரையும் செலுத்தியே வந்தான். தாமரையாள் அளித்த மனமகிழ்வு கூட அவனுக்கு மனிதனால் அளிக்க முடியாமற் போய்விட்டது. ஒருவன் பின் ஒருவன் கைகட்டி வாய் புதைத்துச் செல்லுமொரு கூட்டம். ஜாதி இனம் என்று தம்மையே பாகுபடுத்தி பேசும் சாரார் மறு கூட்டம். பார்வைக்குப் பகட்டாகத் திரியும் பண்பற்றோர் பிறிதொரு கூட்டம். பசியென்போர் ஒரு கூட்டம், சுரண்டுவோர் இன்னொரு கூட்டம். அரசன் ஒருவன். அவனால் அனாவசியமாக ஆட்டப்படுவோர் மற்றொரு கூட்டம் ஐயோ! ஒவ்வொரு தேசம். உலகின் மனித செய்கையைக் கண்ட சூரியன் வெட்கித் தலைகுனிந்தான். "மனித இனம் இவர்கள்! ஒரே நெறியில் ஒற்றுமை வழியில் வாழ முடியாதவர்கள், உலகம் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. ஆனால் மனிதனின் செய்கைகள் தாம் அருவருப்புடையதாச்சே! வேண்டாம் இவ்வுலகம!" என்று கூறிக்கொண்டே மேற்கே போய் மறைந்து விட்டான் சூரியன். உலகை இருள் கவ்விக்கொண்டது. உலகை விட்டு மறைந்த சூரியனின் மனத்திரையில் தாமரையாள் வதனம் தோன்றியது. தாமரையாளில் கொண்ட பாசம் அவனை வாட்டத் தொடங்கிற்று. என்ன செய்வான்? மனிதன் நாளை திருந்திவிடுவான். இந்த இரவின் இருளே அவனுக்குப் பாடம் கற்பிக்கட்டும். ஆனால் என் தாமரையாள்! மனிதன் செய்த பிழைக்கு, என்னை வரவேற்ற தாமரையாளும் துன்பமனுபவிக்க வேண்டுமா? தாமரையாளை நினைந்தவுடன், அவனுக்கு அனுதாபம் பொங்கிற்று. உடனே தம்பி சந்திரனை

அழைத்தான். "உலகிற் சென்று என்னை வரவேற்ற தாமரையாளுக்கு உன் ஒளியை காட்டு" என்றான்.

அண்ணனின் சொற்கேட்டு உலகை நோக்கினான் சந்திரன். சூரியன் வரவையே எதிர்பார்த்திருந்த தாமரையாள் முகம் மலராது கூம்பிக்கொண்டாள். நமக்காக வந்தவரை வரவேற்காமலா விடுவது என்ற எண்ணங் கொண்ட தாமரையாளுடைய தங்கை குமுதம், மலர்ந்த முகத்துடன் சந்திரனை வரவேற்றாள். இரவிலும் மனிதன் தன் தீய செயல்களைப்புரிந்து கொண்டு தானிருந்தான். சந்திரனுக்கு இது அருவருப்பையே கொடுத்தது. உடனே உலகை விட்டகன்று விட்டான் என்றாலும், குமுதத்தாளை அவனால் மறக்கவே முடியவில்லை. சந்திரன் தாமரையாளின் வாட்டத்தை அண்ணாவுக்குரைத்தான். சூரியனும் அவளைக் காணவே துடித்தான். மனிதனும் இதுவரையில் திருந்தியிருப்பான் என உலகில் உதித்தான் சூரியன். ஆனால் மனிதன்! "அப்பா சூரியபகவா! வந்துவிட்டாயா? இருளாய்க் கிடந்த எங்கள் உலகத்திற்கு ஒளியைத் தந்த கடவுளே!" என்று கத்தியவாறே கையெடுத்து வணங்கிய வண்ணமேயிருந்தான். தாமரை சூரியன் வரவால் முகம் மலர்ந்தாள். சூரியன் மேற்கையடையுமட்டும் மனிதன் அவனின் பழக்கமான செயல்களைப் புரிந்து கொண்டே தான் இருந்தான். சூரியன் வெறுப்படைந்து மறைந்துவிட்டான். மனிதன் இன்று திருந்துவான், நாளை திருந்துவான் என்ற எண்ணத்துடன் சூரியனும் சந்திரனும் இடைக்காலம் ஓய்வு கொடுத்து - மறைந்து, மறைந்து உதிக்கின்றன. ஆனால், மனிதன் திருந்தவுமில்லை. சூரியனும் சந்திரனும் நிலையாக உலகில் நிற்கவுமில்லை. ஆனால், அவைகளின் மனநிலை புரியாத மனிதன் இவையாவும் இயற்கை என்றே கொண்டான்.

10.07.1960

# உறவு

பரிணாம வளர்ச்சி உந்தலால் மாற்றத் தோற்றம் பெற்றதுமல்ல; லௌகீக வாழ்வின் அனுபவ முதிர்ச்சி பெற்ற பொருளுமல்ல; பசியின் உத்வேகத்தை தணிக்க ஏற்படுத்த எழுந்த உருவத்தை ஆக்கும் புதுமுறை அச்சிதானது. பிட்டைச் சீரான ஆயத்தத்திற்கென அவித்து, அழகிய அமைப் புருவம் பெற ஆக்கும் நுணுக்கமாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூங்கிற் குழல். ஊதி இசை பெருக்கும் நிலையிலுள்ள சிறு துவாரங்களைப் பெற்ற, குறுகிய கன அமைப்பைப் பெற்றதல்ல. வயிற்றைப் புடைக்க உதவி செய்யும் பிட்டுருவைப் பிரசவிக்கும் கனச் சுற்றளவு பெற்ற துவார அமைப்புடையது.

அழகிய அமைப்போடு உருசியான பதார்த்தத்தை அவித்து அனுபவிக்க, அம்மூங்கிற் குழலை வீட்டிற்கு எடுத்து வந்தான் தலைவன். "நல்லதோர் அமைப்பு, அடுக்களைப் பொருள், ஆண்களுக்கு அக்கறை வந்ததே! அதுவே போதும்" என்று புருஷனின் கைத்திறனை வியந்து பாராட்டித் தன்னுடைமையாக்கிக் கொண்டாள் மனைவி.

காலைச்சாப்பாட்டிற்கான தடபுடல் ஏற்பாடு தொடங்கிற்று. கணவனின் ஆக்க வல்லமைக்குட்பட்ட சிருஷ்டியால், மனைவியின் மனையியல் திறமையின் மென்மையை சிருஷ்டித்துக் காட்ட ஒரு சந்தர்ப்பம் வந்தது. திறமையும், திறமையும் ஒன்றிக்கப்பட்டுத் திறம்பட அரிசி மாவைப் பிதறிப் பதப்படுத்தினாள் தலைவி. அடுப்பிலே கொதிக்கும் நீர் "சிர்"ரென ஒலிகிளப்பிற்று. பிட்டுக் குழலுள் மாவும், தேங்காய்ப்பூவும்அடக்கப்பட்டன. பதம் பெற அடுப்பில் வைத்து நேரத்தை விரசினாள் நாயகி. கால இடைவெளி பதமாக்கப்பட்ட நிலையினைக் காட்ட, ஆவி மேலெழுந்தது. அடுப்பை விட்டு மூங்கிற் குழலை அகற்றி, குழலுள் உள்ள பிட்டைத் தட்டில் தள்ளினாளவள். அவிந்து அழகிய அமைப்பைப் பெற்றுத் தோற்றமளித்த பிட்டுருவைக் கண்டு, புருஷன் வியந்து மகிழ்ந்தான்.

கணவனளித்த வார்ப்பான அச்சுவடிவு, மனைவி செய்த பிட்டில் அமைப்புப் பெற்றது. பிட்டும் குழலும் வேறு திக்காகின. அது பிட்டு, இது மூங்கிற் குழல். அடுத்தடுத்து இரண்டையும் வைத்துவிட்டு, நாயகி வேறு வேலைகளுக்காகச் சென்று விட்டாள்.

பிட்டின் அழகிய அமைப்பில் இலயித்த மூங்கிற் குழல், தனது அச்சின் உருவால் உருப்பெற்ற உறவினைக் கொண்டாட முன்னெழுந்தது. "மகனே! என்னுருவில் நீ அழகுபெற்றல்லவா இருக்கின்றாய்? என்னருகே வா" என்று பிரசவித்த உறவு கொண்டாடியது. ஆனால் பிட்டு, வியப்புடன் நோக்கி மிரண்டது. "என்னைப் படைத்து அமர்த்திச் சென்றவள் வந்து விடுவாள். எனக்குக் கர்த்தா அவளே! வடிவு உன்னுடையதானால், எப்படி உறவாகும்? உனக்கும் எனக்கும் என்ன உறவு? என்ன பாசம்? நீ ஓர் அச்சிதான்" என்று கூறிய பிட்டு, படைத்தவளை அண்டியது.

ஏப்ரல் 1972

# வலை

இறைவன் படைப்பான ஜீவராசிகளிடம் மனிதன் இயற்கையாக அன்பு செலுத்த முயலுகின்றான். அதிலும் மென்மையும், அழகும் ஒருங்கே சேர்ந்து மனோரம்மியத்தைக் கொடுக்கும் ஜீவராசிகளெனின் அவற்றின் மேல் அவனுக்கு இன்னும் ஆசையதிகம். அவனது ஆசைகள், அவற்றையடையத் துடிக்கும் நோக்கங்கள் வெவ்வேறாகவும் படலாம். அவை மன இயல்பின் பாற்பட்டவையாகும். இந்த அன்பு மேலீடுதான் அந்த அழகியமானிலும் அம்மனிதனுக்கு ஏற்பட்டது. துள்ளிக் குதித்து அப்பற்றைக் காட்டையே அல்லோலகல்லோலப்படுத்தும் அந்த மானை அண்டினான் அம்மனிதன்.

"மாமிசப் பிரியர்கள் உலவும் இடமல்லவா இது இங்கு சுதந்திரமாகத் திரியும் எண்ணத்துடன் நீ உலவுகின்றாய்! உன்னையுமறியாமல் உன் சுதந்திரம், அழிவுப் பாதையை அழைத்துக் காட்டிவிடும். ஆகையினால், உன் மென்மையையும் அழகையும் விரும்பும் என்னிடம் வந்து விடேன்" என்று கேட்டான்.

அச்சத்தின் எதிரொலி போறபட்டது மானுக்கு. அசந்துபோய் நின்ற மான், அவனை

அணுக மறுத்து ஓட்டம் பிடிக்க முயன்றது. ஆசை மிகுதியாலும், அதன் அழிவை விரும்பாததாலும் மானைப் பிடித்து எல்லைவரித்துக்கூட்டினுள் அடைத்தான் மனிதன். அந்த எல்லையின் விரிவு இசைவானதாக மானுக்குப் படவில்லை. தனிமையும் குறுகிய பரப்பும் அதனை வேதனைக்குள்ளாக்கியது. "என் சுதந்திர வழிக்கே என்னைவிட்டு விடு" என்ற மனிதனிடம் மன்றாடியது மான். "உன் நன்மைக்காகத்தான் இவற்றை எல்லாம் செய்கின்றேன்; அனுபவம் உனக்கு நல்லறிவைப் பயக்கும்" என்று மானிடம் கூறினான் மனிதன். அவனது சொல், செயல் மானுக்கு விளங்கவில்லை. அவனது செய்கைகளை அது கீழ்த்தரமாகவே நினைத்தது. அதற்கு உணவு வகைகள் அதிகமாகக் கொடுக்கப்பட்டன. அதன் உடல் வளர்ச்சி நோக்கி உன்னத உணவளித்தான் அம்மனிதன். அதனைக் கட்டி, அதன் சுதந்திரத்தை மடக்கி வைக்க வேண்டும் என்பது அம்மனிதனின் எண்ணமல்ல. அதனை மனிதனுடன் பழக்கி எங்கும் பயமின்றி வாழவைக்கும் பக்குவத்தையடையச் செய்வதற்காகவே கூட்டில் வைத்து அடைத்தான். மானும் தன் சோர்வகற்றி ஒருவாறு பழகிக் கூட்டினுள் வாழத் தொடங்கிற்று.

"மான் பக்குவப்பட்டு விட்டது; அது நம்மையேயண்டி வாழும்" எனும் சிந்தனையுடன் இருந்தான் மனிதன்.

சிறைபோலிருக்கும் கூடுதான் எதற்கு? சகல சௌபாக்கியங்களுடன் எல்லையையும் விரித்துச் சுதந்திரமாக வாழட்டுமே என்று மானைச் சிறையினின்றும் திறந்துவிட்டான் மனிதன். "உனது எண்ணப்படி எங்கும் சென்று நீ வாழலாம். உன் தங்குமிடமாக நீ என்னிடத்தையே ஆக்கிக் கொள்ள வேண்டும். உன் நன்மையில் அதிக அக்கறை எனக்குண்டு" என்று மனிதன் மானிடம் சொன்னான். இந்த இனிமையான

வார்த்தைகளைச் செவிமடுத்த மான், தலையையசைத்துக் கொண்டது.

மனிதனின் எண்ணத்தினை அறிய முடியாத மான், அதற்குக் கிடைத்த சகல பாக்கியங்களையும் மறந்து, துள்ளிக்குதித்துப் பழைய காட்டைக் கலக்கியோடியது, சிந்தனையில்லாத அவ்வோட்டத்தின் வழியினைக்கூட அதன் கண்கள் திறந்து பார்க்கவே மறந்தன. தாவிச் சென்ற பாய்ச்சலின் உச்சம் கால்களைச் சிக்க வைத்தது. எடுத்த அடியே வைக்க முடியாத நிலை. துள்ளிக்குதித்து மேலெழுந்த மான் தடுக்கிக் கீழே விழுந்து தடுமாறிற்று.

மறைவில் வலையை வைத்து எதிர்பார்த்துக்-கொண்டிருந்த வேடன், கையில் கத்தியுடன் மானை-யணுகி அறுக்க முயன்றான்!

29-06-1967

## தியாகம்

உயர்ந்து வளரத்துடிக்கும், பரந்த அழகு தரும் தேயிலைச் செடித்தோட்டம். மலைவள இயற்கையின் மடியிலே தவழச் சுதந்திர எக்களிப்புடன் பரிமளித்தது. வனப்பும், வழியும் வாய்ப்பூட்டின. உயர்ந்து துளிர் விட்டன அச்செடிகள். ஒய்யார ஆரவாரம் ஒலித்தன. "கவ்வாத்" வெட்டும் கண்காணிப்பு, தோட்டத் தொழிலாளிகள் நறுக்கித்தள்ளினர். தன்னுயர்வை நாடா இனம்; அஃறிணை வளர்ச்சியை ஏன் தடுக்க வேண்டும்? உயர-மாய் வளர்ந்தால் துளிர் கொய்ய வாய்ப்பில்லை. படர்ந்து வளரச் செய்யும் எத்தனம். இந்-நாட்டின் பொருளாதார விருத்திக்கு ஏற்ற செய்கை. நாட்டுக்காக இத்தியாகம் செய்ய வேண்டியதாயிற்று. உயரமானவன்" என்று கூறிக்கொள்ளாவிட்டாலும் "உயர்ந்தவன்" என்பதில் ஒரு பெருமிதம்.

துளிர் விட்டலர்ந்த மென்மிதக்காலம். கொழுந்து பறிக்க ஏற்பாடாகும் காலமிது. இளந்தளிர்க்குருத்தின் கழுத்துப்பாகத்தைப் புதுக் குளிர்ச்சிக்கரம் நெருங்கும் வேளை. கூடையின் அணைப்புடன் நெருங்கும் கொழுந்து பறிக்கும் இளம் பெண்.

துளிர்த்துத் துவண்ட கொழுந்தைப் பறிக்க நெருங்கும் வேளை. என்னைக்கிள்ளிப் பறித்து எனது வளர்ச்சியைத் தடை செய்யவா பார்க்கிறாய்?

"நாட்டின் நலனே உனது உச்சிக் கொழுந்தின் உயர்ச்சியிலல்லவா தவழ்கிறது. சரி, நாட்டின் உயர்விற்காக இதோ.... எடு கிள்ளி எடு!

"என் வளர்ச்சியை நெருக்கி ஒடுக்க நீ யார்?" கொழுந்துத்துளிரின் வாழத்துடிக்கும் வேக உணர்ச்சி.

"இந்நாட்டின் உயர்ச்சி, உன் வளர்ச்சியின் உச்சியில் தானே!" அந்தக் கொழுந்து பறிக்கும் அழகியின் இரக்க உணர்ச்சிக் குரல். பெருமித எக்களிப்பு.

"இந்நாட்டிற்காக என் வளர்ச்சியைத் தியாகம் செய்கின்றேன்" என்றது உரம் விட்டுப் படரும் செடி.

"ஏன்! நானுந்தான் உழைப்பாளர் வரிசையிலிருந்து கொண்டும், இந்நாட்டு உயர்ச்சிக்காக தியாகியாகத் தானே வாழ்கின்றேன்." என்றாள் அந்த உயர் நங்கை.

திருகிய மென்கரம், தியாகம் செய்யும் பால்பசையுடன் துளிர்ந்த கொழுந்தை ஏந்தியது.

21-03-1964

# விளைவு

மழையில்லாத தேக்கம். நீர் நின்ற ஆழமான நிலம் யாவும் வற்றிவரண்ட சூன்ய நிலை. எருமைக்குத் தண்ணீர் கரும்பு. ஆனால் நிலை பரிதாபம். வெறிச் சென்ற அனல், ஜூவாலை வெறியுடன் எருமைக் கடாவின் உடலைச் சுட்டெரித்தது. நீர்தானில்லை. நீரணுக் காற்றாவது தேடிச்சுற்றி அலையும் பரிதாபத் தேவை. கடற்கரை தான் தஞ்சம். பருவவயதில் எதிர்ப்பாலாரின் உறவு இல்லாவிட்டாலும் தேடி அலைவதில் - பார்த்து ரசிப்பதில் ஏற்படும் இன்பம் கண் குளுத்தி, திருப்தி, கடல்நீருள் ஆழந்து முழுக முடியாவிட்-டாலும், நீர்ப்பரப்பைப் பார்த்துக் கொண்-டிருப்பதில் எருமைக்கு அலாதி இன்பம் போலும்.

அந்திவேளை கடற்கரை மணலில் அயர்ந்த ஓட்டத்துடன் கடற்காற்று வாங்கிற்று எருமை. ஏதோ உடல் நச்சரிப்பு தீர்ந்த உற்சாகம்; ஆனால் பரிபூரண அமைதியில்லை. அயர்ந்த நிதர்சனப்படுக்கை, பூரணசுகம். ஒரு பக்க வயிற்றின் விலாச்சதைத் தொழுவில் சொரணை ஸ்பரிசம்! மீண்டும் தைப்பு உரசல்.

வேதனையளிக்கும் அலுப்பு. திரும்பிப் பார்த்தது கடா. சொரணை மேலுடன் ஒரு கிழிஞ்சல்.

"பொடிப்பயலே உனது வாலாட்டமா இது? உன்னை யார் தான் இந்த உலகில் கவனிக்கிறார்கள்?" கடாவின் தன்னெடுப்பு நிறைந்த அனுபவமில்லாத மிடுக்குப் பேச்சு.

"ஐயோ! உன்னால்தான் என்னவாம் பிரயோசனம்!" கிழிஞ்சல் சிலாகிக்கும் கர்ஜனை.

"ஏர் உழுது, மனிதகுலம் காப்பவன். நானில்லாவிட்டால் இந்த உலகில் மனித ஜீவனேது? என்னைத்தானே யாவரும் பாராட்டுகின்றனர்." சுய திருப்தி கொள்ளும் கடாவின் உரை.

"ஏன் தான் வீண் அளப்பு. வார்த்தை விரயத்தில் காலத்தை ஓட்டாதே! நான் எதையும் பிரயோசனமுள்ளதாகவே செய்பவன். என்னைப் பற்றி ஏன் நான் உன்னிடம் அளக்கவேண்டும். அது உனக்கு விளங்காது. இதோ எனக்கும் உனக்குமுள்ள ஒரு வேறுபாடு. நாள் முழுதும் உன் முதுகில் மழை கொட்டுகிறதே! அதனால் உனக்கென்ன பிரயோசனம். மனிதர்களே "எருமை மாட்டின் மீது மழை பெய்வது போல" என இகழ்கின்றனர். நான் அந்த மழையின் ஒரு சொட்டைத்தான் விழுங்குகிறேன். ஜீரணம் என்ன தெரியுமா? முத்து! உலகமே புகழும் விலை மதிக்க முடியாத குணிப்பொருள். இதை அறிந்தாயோ?" என்றது கிழிஞ்சல். சிறுதெளிவு, வெட்கப்பார்வை அலர்ந்த, மந்தமாருதவேளை, உலகமே இருள் கவ்வும் நேரம், தன்னிடத்தை நோக்கி விரைந்ததுகடா.

10-07-1963

# விட்டிலுக்கு ஒரு விளக்கு

விசித்திர சிருஷ்டிகளைப் படைத்து, வினோதம் பார்க்கும் ஒரு சக்தி. ஏன் உலகத்தார் பாஷையில் இறைவன் என்றே கூறுவோமே!

மரபும், விழிப்பும், நடையும் காட்டக்கூட ஒரு ஜீவனாவது இல்லை. வெறும் நிலமும் நீருந்தான். "அவன்" விளையாட்டைக் காட்டவே உயிர்ப்பொருள்கள் யாவையும் சிருஷ்டித்தான். உலகம் ஏதோ சிறு வினோதமாய்த்தானிருந்தது. ஏனோ பெருவினோதம் என்று கூற முடியாமல் ஒரு குறை.

ஆம்; "மனித"னில்லாப் பெரும் குறை! உலகம் "சப்" என்று கிடந்தது.

இறைவன் மெல்லச் சிரித்து ஆகுக! என்றதும்.

ஆ! மனிதன் தோன்றிவிட்டான். "அவன்" சக்தியையெல்லாம் பரிசோதிக்க விசித்திர ஜென்மம் "அவன்" கீழே ஆக்கப்பட்டு விட்டது. உலகெங்கும் ஒரே இனமாகத்தானிருக்கவேண்டும்! ஆகையால் தான் கவர்ச்சி முழுவதும் அந்தக் கர்த்தாவையே நாடி நின்றது. கர்த்தனுக்கு மீண்டும் தொல்லை. மனிதன்

உலகை நாடவில்லை. உண்மைப் பொருளையே நாடுகின்றான், அறுசுவையுண்டி, அளப்பரிய செல்வம், அத்தனையையுமாக்கி அவற்றை அனுபவிக்க மனித-னைப் படைத்தான் இறைவன். அந்த மனிதன் உலகை ஏதோ துடக்கு மனப்பான்மையுடன் தான் நோக்கினான். தியானம் மேலோங்கிற்று. இறையின் வேடிக்கைக்கு இணங்கவில்லை மனித சிருஷ்டி.

ஒளிப்பிளம்பு சுவாலை விட்டெரிந்து கொண்டது.

அதில் இறங்கும் ஜீவன் இறக்கும் ஜீவன் தான். ஆனால் ஏதோ ஒரு உணர்ச்சி, அந்த விட்டிலை அங்கு தள்ளிக்கொண்டே சென்றது. விட்டிலுக்குத் தெரியும் விளக்கு அழகுணர்ச்சியைக் கிளப்புகின்றதேயென்று. அந்த அக்கினியில் போதை கொண்ட விட்டில், விழுந்தால் மடிவோம் என்று தெரிந்தும் சிறுநேர உணர்ச்சி மேலீட்டால் விழுந்து மாண்டு விட்டது!

இறைவனின் எண்ணத்தில் இந்த நிகழ்ச்சி ஊருகிறது.....

"இந்த விட்டில் - விளக்கு" கவர்ச்சி தான் மனிதனுக்கும் வேண்டும். அவனுக்காக ஆக்கிய பிரபஞ்சத்தில் அவன் வீழ்ந்து மடிந்து இறந்தொழிய வேண்டும். இதுதான் கர்த்தாவின் இலட்சிய ஆசைப் பகைப்புலம்.

"விட்டிலுக்கு விளக்கு; வாழ்வதற்குகொரு கவர்ச்சி - உணர்ச்சி, அதனை மனிதனுக்குள்ளேயே சிருஷ்டிக்க வேண்டும்"

ஏன் முடியாது? சர்வ உலக ரட்சகனாயிற்றே!

அடுத்த கணம்

மென் தவிட்டின் மேற்படும் பெருவிரலின் உணர்ச்சி, குடித்து வெறித்துப் போதையில் உழன்ற-

வனுக்கு, மீண்டும் தேவைப்படும் முன்னாள் இன்ப வெள்ளம், கண்முன் தோன்றி மறைந்தது பார்க்கத் துடிக்கும் ஒரு பரவச அழகு. இத்தனையும் கொண்டதாகவே அந்த விளக்கு.

உலக விளக்கு

பெண் படைக்கப்பட்டாள்!

உலகம் மாறி, மாறிச் சுழன்று கொண்டேயிருக்கின்றது. சிந்தனையில்லாத சுழற்சி! இலட்சியமில்லாத போக்கு! படைத்தவனே ஏமாந்து விட்டான். கர்த்தனுக்கும் அவன் சிருஷ்டிக்கும் இடைவெளியில்லாத தொலை.

விட்டிலும் பெருகி அழிகின்றது. விளக்கும் அணைந்து "சுவாலை" விடுகின்றது.

ஜனவரி-1963

## கறையான் புற்றெடுக்க...!

**ஊ**ர்வன, கடும்வேலை; பல கோடிக்கணக்கான கறையான்களின் ஓட்டமும், வேலையும், மனிதர்களே கண்டுபிடிக்க முடியாத பசைமண், செம்மையான மண் இப்பசை மண்தான் பதத்துடன் உயர்கின்றது. அடுக்கிய கற்களில்லை. மேலே போகப் போகக் குறுகிய கோபுர வடிவு. ஊர்வன ஊர்ந்து கோபுர உச்சியையடையவே நாளிகை சுழலும்; விரலுக்கேற்ற வீக்கமல்ல. சயனித்து ஆச்சர்யம் தரும் வீக்கம். பலகால உழைப்பின் கடும் பயன் பலகோடிக் கறையான்களும் ஆக்க சிருஷ்டியின் உயர்வு கண்டு எக்களிக்கின்றன. வெளிவயல்கள் தன்னல ஒடுக்கமற்றுத் திறந்து கிடக்கின்றன. உழைப்பாளியின் சிருஷ்டியை உடைத்து நொறுக்க இதயத்துரோகம் யாருக்கும் வராது. கறையான்கள் சுதந்திர வேகத்துடன் பரந்த அப்புற்றின் அறைகள் ஒவ்வொன்றினிலும் சந்தோஷ எக்களிப்புடன் பள்ளி கொள்ளுகின்றன.

இரவினமைதி! இடைக்கிடை சில்லூறு இரைச்சல், பழக்கப்பட்ட தாலாட்டு ஓசை, "உஸ்....ஸ்ஸு....ஸ்...ஸ்..." சீறல் சத்தம்; வரவர அண்மிய உணர்வு சுதந்திரக் கறையான்கள்,

பீதியுடன் விழித்தெழுந்து வாயிலண்டை வருகின்றன. சாரையும், நாகமும் புற்றை அண்மின. லாவகச் சொகுசுடன் புதுவித உணர்வு வேகத்தோடு புற்றுக்குள் புகுந்து கொண்டன. சுவீகாரப்போக்கோ, சொந்தம் பாராட்டும் தன்மையோ! ஊர்வன அகன்றன; யாரிடம் கூறுவது?

மனித தேவை எதைத்தான் விட்டது. மறுநாள் புற்றுமண் கட்டிட நிர்மாணத்திற்குப் பலம் பொருந்திய-தென, வெட்டிக் கொண்டிருந்தான் ஒரு மனிதன்.

செப்டம்பர் - 1962

# திருப்தி

இரவின் ஆட்சி எங்கும்பரவிக்கொண்டது. "கும்" என்ற கறுத்த இருட்டு. கண்ணில் குத்தினாலும் கைதெரிய இருட்டு. பகலில் நடந்த பழக்கத்தால் மட்டும் வீதியில் நடந்து கொள்ளலாம். வெளிச்சம் வைத்திருப்போரே திருப்தியாக நடந்து செல்கின்றனர்.

"ஏன் இவ்வளவு இருட்டு?"

"ஓ! முன்னிருட்டல்லவா?"

இருட்டிலே இருவரின் இருட்டறிவுப் பேச்சு அடிபட்டது. ஒலிகள் மட்டுந்தான் மிதந்தன. உருவங்களைக் காண இருட்டு விடவில்லை.

பூமியின் பரப்பெல்லாம் முன்னிருட்டுக் கவ்விக்கொண்டது. ஆனால், வானத்தில்! அந்தப் பிராந்தியமும் இருட்டுத்தான். அப்படியிருந்தும் மின்னும் கோடிக்கணக்கான விண் மீன்கள் கண் சிமிட்டின. அலங்காரத் தீ வெட்டிகள் தூரத்தே வந்து கொண்டிருக்கும் காட்சியை வானத்தே ஜாலமிட்டுக் கொண்டிருந்த தாரகைகள் தந்தன. இன்று அவைகளுக்கோர் எக்களிப்பு. தனிராட்சிய அமைப்பில் வாழும் சுதந்திர ஜீவன்கள் போல் சந்தோ

ஷித்து மின்னின. மேற்கே சுடர் விட்டுத் தனியான ஒளியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் மாலை வெள்ளி தன்னிடமிருக்கும் அபார ஒளித்திறமையை இருட்டி-னூடே சிமிட்டிக் காட்டிற்று.

இயற்கை இரசிககோடிகள் விண்மீன்களை எண்ணும் தோரணைசெய்தனர். இந்த இருட்டில் தெரியும் இயற்கை வெளிச்சம் அவைதானே! வெறிச் சென்ற பயங்கர இருட்டில் தலைகாட்டும் மின்மினி ஒளிக் கூட்டம்.

"ஆ! உலகிலுள்ளோர் எங்களின் சிமிட்டலையும் வரவையுந்தான் நோக்கிக் காத்திருக்கின்றார்கள். நமதொளியில் பரவசமூட்டும் தனித்தன்மையுண்டு! வேறு இந்த உலகின் இருட்டில் தற்சமயம் ஒளி கொடுப்-போர் யார்?" என நட்சத்திரக் கூட்டங்களில் ஒவ்-வொன்றும் எண்ணித்திருப்தி கொண்டன. "ஆலை-யில்லா ஊருக்கு இலுப்பை" போல.

நேரம் நடுச்சாமத்தைத் தாண்டிற்று. மறைந்திருந்த சந்திரனும் மிதந்து வந்தான். தனி இருட்டில் ஒளி பெருக்கிச் சிமிட்டிய தாரகை மணிகள் சிறிது ஒளி மங்கின. தனதொளியை வியந்து தண்ணொளி பரப்-பினான் சந்திரன்.

"இஞ்சப் பாருங்கவன் வலை இழுக்கப் போகணும் எண்டீங்களே!

"நிலாக்கிளம்பி கன நேரம் எழும்புங்க!" என்றாள் அந்த மீனவன் துணைவி.

"ஓ! நம் வருகை உலகத்தாருக்கு மிகமிக அவசியம். என்னொளி என துதவி எவருக்கும் வேண்டியன. இல்லாவிட்டால் புலவர்களின் இசைக்கருவாக அழகி-களின் முக அழகுக்காக உவமைக்கோ உள்ளடக்கத்-திற்கோ சேர்க்காமல் விட்டிருப்பார்களே! எனவே,

எனக்கொரு தனி மதிப்புண்டு!" எனத் தன்னிடமிருக்கும் தன்மையை நினைந்து பூரண திருப்தி கொண்டான் சந்திரன்.

இப்படியே காலம் நேரத்தை விரட்டியது. உதய-வானில் வெள்ளிக்கீறலுடன் உலகை எட்டிப்பார்த்தான் சூரியன். பகட்டிக்கொண்டிருந்த விண்மீன்கள், தண்ணொளி பரப்பிய சந்திரன், ஒளி இழந்து இருந்த இடம் தெரியாது மங்கி மறைந்தன. இரவில் உறங்கிய பாவும் பம்பர வேகத்தில் தனது தொழிலுக்கு விரைந்-தன.

"பொழுது கிளம்பி இவ்வளவு நேரமாப் போச்சி எழும்பி ஒப்பீஸுக்குப் போக ஆயத்தம் செய்யுங்களன்" என்கிறாள் அந்த ஒப்பீஸர் மனைவி.

"ஓ! நம் வரவில்லாவிட்டால் உலகம் எப்படி இயங்கும். வாழ்க்கையே எல்லோருக்கும் "சப்" பென்றாகி விடுமே! அப்படியென்றால் நான்தான் உலகில் முக்கியமானவன். உலக இயக்கத்தின் பொறுப்பு வாய்ந்தவன்" என்ற கம்பீரத்துடனும் வாய்த்ததனித் தன்மையுடனும் மேற்கை நோக்கி நகர்ந்தான் சூரியன்.

உலகிலிருப்பன ஒவ்வொன்றும் தனது தனித் தன்மையை நினைந்து "திருப்தி"யுடன் தான் வாழ்-கின்றன.

05-03-1962

# அறியாமை

விசாலமான தோப்பின் பிரகரணத்தில்தான் தன் இன உடன்பிறந்தாருடன் ஒன்றித்து வாழ்ந்தது அந்த வாழை. அந்த மூலையில் எவர் கண்களுக்கும் எட்டாத ஒடுங்கிய பரப்பில், தான் பெற்ற குலையுடன் ஒரு பக்கம் சாய்ந்து நின்றது.

இறைவனின் வேறு விவகாரப் படைப்புத்தான் அந்தக் கிளி. பழமிருந்தால் கிளி எங்கிருந்தும் தங்கவருவது இயற்கைதானே! உலகத் துறவியின் நிலையிலுள்ள அந்தக் குலையீன்ற வாழை, எதுவித ஆசாபாசங்களையும் எண்ணவில்லை.

"ஆ வாழையே நீ வாழ்க!"

பசி உள்ளவன், பணமில்லாதவன், இரப்பதற்கு முன் கூறும் வெறுப்பான வார்த்தை, இது கிளிகூறிய கிள்ளைமொழி!

"ஏனப்பா வாழ்த்துகின்றாய்! ஈன்றவுடன் இறப்பவனல்லவா நான்? உன்தேவை நீங்க ஏற்பட்ட வெறும் வார்த்தைகளவை. உள்ளத்தோடு ஒட்டி வந்ததல்ல." என்பது வாழையின் கூற்று.

சலசலத்த ஓசை கேட்டுப் பறந்தது கிளி. மறைவிலிருந்த பழக்குலை தோட்டக்காரன் கண்ணில் பட்டுவிட்டது. கையிலிருந்த கத்தியால் வெட்டிச் சாய்த்தான் பழம் தந்த மரத்தை. விசாலமான இடத்தைக் கண்ட உடன் பிறந்த வாழைக்கன்றுகள் சந்தோஷித்தன. அதற்குவரும் கதியுமிதுதான் என்பதை உணர அனுபவ இடைவெளி விடவில்லை.

21-01-1962

# சுயநலம்

உலகத்திற்கும் வானத்திற்கும் இடையே பரந்த வெளி, மனிதன் பிறக்காத காலமது. வானமும் உலகமுந்தான் தோன்றியிருக்க வேண்டும். அக்காலத்தில் உலகத்திருக்கும் பொருட்களுக்கு வானத்திற்குச் செல்ல ஆசை. அதே மாதிரிதான் வானத்திலிருப்பவை-களுக்கும். "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்பார்களே!" அதுமாதிரி, மேகமும் இதே பிரச்சினையைத்தான் சிந்தித்துக் கொண்டிருந்-தது. அதன் சிந்தனை, வானத்தையும் உலகத்-தையும் ஒப்பிட்டு நோக்கியது. ஆம்! "மனி-தர்கள் ஒட்டிக் கொள்ளப் பணம் படைத்த-வர்களைத் தேடுவதுபோல்" மேகம் கடைசி-யாக ஒரு முடிவுக்கு வந்தது உலகத்தில் ஒட்டிக்கொண்டால் குறிப்பிட்ட ஓரிடத்-தையே ஒட்டவேண்டும். ஆனால், வானத்து-டன் சேர்ந்து கொண்டால், கீழே உருளும் உலகம் முழுமையையும் அப்படியே பார்த்து விடலாம். எனவே, வானந்தான் சிறந்த இருப்பிடம் என்ற முடிவுடன் மேகம் வானத்-துடன் ஒட்டிக் கொண்டது. காலமும் பறந்-தோடியது. மேகத்தின் எண்ணம் கைகூட-வில்லை. வானத்துடன் ஒட்டியதால் குறிப்-

பிட்ட ஓரிடத்தில் தான் இருக்க முடிந்தது. அதன் சிந்தனை செயலாடத் தொடங்கிற்று. உடனே, வானத்தின் நட்பிலிருந்து பிரிபட எண்ணியது.

"நான் உலகத்திற்கே போகிறேன்" எனக் கூறிவிட்டு வானத்தை விட்டுப் பிரிந்தது மேகம். ஆனால் அது உலகத்தை நோக்கவில்லை. வானத்திற்கும் உலகத்திற்கு-மிடையே உலவி எல்லாவித இன்பங்களையும் இரசித்துக் கொண்டிருந்தது. மேகத்தின் இச்சுகானுபவத்தினால் உலகமும் வானமும் ஒருவரை யொருவர் பார்க்க முடியாதவர்களாகி விட்டனர். சிலரின் இன்பத்திற்காகப் பலர் நசுக்கப்படுவதுபோல்" மேகம் உலகத்திற்கும், வானத்திற்கும் திரையெனப் பரவிநின்றது.

வானம் தான் ஏமாந்து விட்டதை உணர்ந்து சூரியனை ஏவிக் கொடூர அனலை வீசச்செய்தது. உலகமும் மேகத்தைத் தன்னிடம் சேராதிருக்க வாயுவை ஏவி காற்று வீசச்செய்தது. இரண்டு கஷ்டங்களுக்கு-மிடையே சிக்கித்தவித்துக் கொண்டிருக்கும் மேகம் செய்வதறியாது அங்குமிங்கும் அலைந்து கொண்டே-யிருக்கின்றது. அதனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. உலகத்தையும் வெறுத்தோம். வானத்தையும் பிரிந்தோம் என்பதை நினைத்து, நினைத்து மேகம் அழுது கொண்-டிருப்பது தான் அதன் கண்ணீராக இன்றும் நமக்கு மழையாகப் பொழிகின்றது. சுய சல எண்ணங் கொண்ட-வர் யார் தான் முழு இன்பத்தையும் அடைந்தவர்? முடிவு மேகத்தின் நிலைதான்.

1961

# கருமுகில்

வானம் வெளிறுண்டு, மேகங்கள் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு நிறத்தைக் காட்டிக் கொண்டிருந்தன. மேகக் கூட்டமொன்று சல்லாபமாகத் தென்றலுக் கசைந்தசைந்து ஒரு கருமுகிற் கூட்டத்தை அண்டியது. கருமுகி-லள்ளிவந்த நீரின் குளிர் அவ்வெண்முகிற் கூட்டமான வெள்ளை மேகத்தைத் தாக்காம-லில்லை. என்றாலும், தன்னிடம் அப்பெரு-மையில்லையே எனப்பொறாமையுங் கொண்டது.

"சரி, எங்கே நீரள்ளிச் செல்கின்றாய்?" என்றது அவ்வெண்முகிற் கூட்டம்.

"உலகிலே பிறந்தால், பிறந்ததிற்காக, ஏதாவது சேவை செய்யத்தானே வேண்டும்" என்றது அக்கருமுகிற் கூட்டம்.

"சரிதான் உலகிலுள்ளவர்கள் பேசும். இலட்சியம் மாதிரி இருக்கிறதே! "இலட்சியம்" "புரட்சி" "முற்போக்கு" "சமதர்மம்" என்றெல்-லாம் பேசுகிறார்கள் தான். ஆனால் உலக மக்கள் எல்லோரும் ஓரடிப்படையின் கீழே வந்ததாகயில்லை, வரப்போவதுமில்லை.

இப்படியான சேவையிற்றான் இறங்கிவிட்டீர்களோ?" என்றது ஏளனமாக வெண்முகிற் கூட்டம்.

"ஏன் முடியாது? உலகமக்கள் நல்லவைகளை உணரத்தான் போகிறார்கள். "முற்போக்கு, சமதர்மம்" என்றுணர்த்துபவர்களின் கீழ் ஒத்துழைக்கத்தான் போகிறார்கள்" என்றது ஆர்வத்துடன் அக்கருமுகிற் கூட்டம்.

"ஏன் நாம் உலகத்திற்குப் போவான்? நீ செய்வதாகக் கூறும் சேவா உணர்ச்சியை இங்கிருக்கும் வெண்முகிற் கூட்டத்திற்கெல்லாம் பரப்பி விடேன் பார்ப்போம்" என்றது கர்வத்துடன் அவ்வெண்முகிற் கூட்டம்.

"ஏன் முடியாது? நம்மிடையே நல்லவைகளை யார்தான் ஏற்க மாட்டார்கள்?" என்று கூறிக்கொண்டே, ஆகாயம் முழுவதும் ஓர் சுற்றுச் சுற்றிவந்தது கருமுகில். உடனே ஆகாயமெல்லாம் கறுத்தேவிட்டது. வயல் நிலங்களில், தேவைக்கதிகமாக மழையும் பெய்தது.

1961

# பணநீதி

பொழுது புலர்ந்தது, சூரியன் தனது சுடர்களைத் தென்னந்தோப்புக்குள் நடுவே நீட்டினான். தெருவெல்லாம் காலைச் சூரியனின் "பளீர்" என்ற ஒளி சுடர்விட்டது. அந்த மேன்மாடி வீட்டு வளவில் ஒரு கோடியிலமைந்திருக்கும் மாட்டுக்கொட்டிலை நோக்கிப் பால் கறப்பதற்குக் கைச்செம்புடன் சென்றான் சின்னான். பாலைக் கறந்தபின், அந்தப் பசுவுக்கும் கன்றுக்கும் நிறையத் தவிடு, பிண்ணாக்குச் சேர்த்துக் கொடுத்தான். பின சுதந்திரமாய் உலாவி வருவதற்காகப் பசுவையும் கன்றையும் வெளியே விட்டான்.

மாடி வீட்டுச் சபாபதியின் பசுவும் கன்றும் ஆடி, ஆடித் தெருவில் சென்று கொண்டிருந்தன. அடுத்த வீட்டுச் சுப்பனும் பால் கறந்தபின் தனது பசுவையும், கன்றையும், புல்மேய்வதற்காகத் தனியே அவிழ்த்து விட்டான். சுப்பன் ஏழை. எனவே சொற்ப வைக்கோல்தான் அவனிடமிருந்தது. அதையும் இரவிற்காக மாட்டுக் கொட்டியில் வைத்து விட்டான். சுப்பனின் பசுவும் கன்றும் பசியைப் போக்கப் புல்தேடிப்போவதால் வேகமாகச்

சென்றன. அவைகளின் வேகம் மாடி வீட்டுச் சபாபதியின் பசுவையும் கன்றையுமே பிடித்துவிட்டது.

"என்னப்பா இவ்வளவு வேகம்" என்றது சபாபதியின் பசு. "பசியின் வேகந்தான்" என்றது சுப்பனின் பசு. சபாபதியின் பசு திகைத்தேவிட்டது. எமது இனம் இந்த நிலையிலா வாடுகின்றது? எங்களுக்குள் வேற்றுமை பாராட்டாத நாங்கள் மனிதர்களாலேயே பசி இல்லாதவராகவும், பசி உடையவராகவுமாகிவிட்டோமே! என உள்ளுக்குள் நினைந்து உருகிக்கொண்டது. என்ன செய்யலாம்! சுப்பனின் பசுவோடு சேர்ந்து சபாபதியின் பசுவும் தொடர்ந்தோடியது.

காத்தானின் காய்கறித்தோட்டத்தின் ஒரு பகுதி பசும்புற்தரையாகக் காட்சி தந்தது. இதைக்கண்ட சுப்பனின் பசுவின் நாவில் உமிழ் நீரே ஓடிவந்துவிட்டது. "நண்பா வா! அந்தப் பசும் புல்லுக்குப் போவோம்" என்றது சுப்பனின் பசு. "சரி" என்றபடி இரண்டு பசுக்களும் கன்றுகளும் சென்றன. சபாபதியின் பசுவுக்குப் பசி இல்லைத்தான், என்றாலும் அதனினத்தின் பசியைத் தீர்ப்பதற்காகப் பக்க பலம் கொடுத்து நின்றது. இரண்டு நிமிடங்கள்தாம் சென்றிருக்கும். "அடே அண்ணே! காத்தானண்ணே!! தோட்டத்திலே இரண்டு பசுவுங் கன்றும் பயிரை மேயுதடோ" என்றான் தெருவால் சென்ற ஒரு மனிதன். காத்தானின் மகன் பெரும் கம்பொன்றைத் தூக்கிக்கொண்டோடி வந்தான். பின்னால் வந்த காத்தான் "தம்பி டேய்! அந்த மாடி வீட்டுச் சபாபதியிண்டை மறைப்பசு நிற்குதுடா! அதிலே தொட்டுடாத! அவன் பணக்காரன் பொல்லாதவன். அடிச்சுக் கொல்லுடா அந்தச் சுப்பன்ட பசுவையும் கன்றையும்" என்றான்.

இச்சத்தம் கேட்டது தான் தாமதம் சுப்பனின் பசு துள்ளியது. முதுகிலே "மள மள" வென்று அடிகளும்

கிடைத்தன. சபாபதியின் பசு நடுவே பாய்ந்ததால், சுப்பனின் பசு உயிர் தப்பி ஓடிக்கொண்டது. இளைக்க இளைக்க ஓடிவந்த இருபசுக்களும் கன்றுகளும் ஒரு மரத்தின் கீழே நின்றன. "நண்பா! உனக்குத்தானே அடித்தான் அம்மனிதன்; ஏன் எனக்கடிக்கவில்லை? என்றது சபாபதியின் பசு. இதுதானப்பா பகுத்தறிவு படைத்த மனித இனத்தின் பண்பு. நாங்கள் பசு இனம் என்று பார்ப்போம். அவர்கள் பண இனமாக அவர்களையே பிரித்துக்கொண்டார்கள். சபாபதியின் பணத்தால் நீதிமாறி, தண்டனை எனக்கு மட்டுந்தான் இதுதான் பண நீதி!" என்று சுப்பனின் பசு துக்கத்துடன் சொன்னது.

10-06-1960

# மூட நம்பிக்கை

காட்டின் நடுவே பட்ட மரமொன்று ஊர்வன வாழும் உறைவிடமாகத் தனித்து நின்றது. பார்ப்பதற்கே வெறிச்சென்றிருந்த அம்மரம் பயங்கரத் தோற்றமளித்தது. மரத்தினடியிலே எறும்புக் கூட்டமொன்று மரத்தை அரித்தரித்து உறைவிடமாகக் கூட்டத்தோடு வாழ்ந்தது.

காலையானதும் இரவெல்லாம் பசியோடு படுத்திருந்த எறும்பொன்று தனது வயிற்றைப் பார்க்க மெல்லென ஒரு எறும்பினிடமாவது கூறிக் கொள்ளாது விறுக்கெனத் தனது வேகத்தைக் கூட்டிக் கொண்டு உணவு கிடைக்கும் வரை ஓடியது. மற்ற எறும்புகளின் கண்களின் பார்வைக்கு மிகத்தூரத்தே அவ்வெறும்பு சென்றுவிட்டது, "அப்பாடா! இப்போதாவது உணவை தனித்து வயிராற உண்போம்" என்று பெருமூச்சுவிட்டது. மனித இனச் செய்கைக்கே மாறிவிட்டது அது. தனிமையில் ஏன் என்னினம் ஓடிச் செல்கின்றது? ஏதும் அபாயங்கள் நேர்ந்துவிட்டதா? எனச்சிந்தித்தவாறே அதைப் பின்தொடர்ந்தது இன்னோர் எறும்பு. இரண்டு எறும்புகளும் தொடர்ந்து செல்வதைக் கண்ட இன்னோர்

எறும்பு எனது இனம் தனிமையில் செல்கிறதே! என்ற எண்ணத்துடன் தானும் பின் தொடர்ந்தது. இவ்வாறு ஒவ்வொரு எறும்பாக பின் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தது. தனிமையில் உணவருந்தச் சென்ற எறும்பு தான் செய்யப்போன காரியத்தைக் காட்டிக் கொள்ளாமல் பட்ட மரத்தைச் சுற்றிவளைத்துக் கடைசியில் தன் உறைவிடம் வந்தது. அது சென்றபக்கமெல்லாம் எறும்புக் கூட்டமே பின்தொடர்ந்ததால் பட்டமரமெங்கும் எறும்புகள் சென்ற தடம் ஏற்பட்டு விட்டது. இச்செய்கையை அடுத்து எறும்புக் கூட்டம் எப்பொழுதும் எங்கு செல்வதானாலும் ஒன்றின் பின் ஒன்றாகச் சென்று கொண்டேயிருக்கின்றன. எனவே தான் "எறும்பூரக் கல்லுந்தேயும்," என்ற பழமொழியும் பிறந்து விட்டது. ஆனால் ஏன் இப்படிப் பின் தொடர்ந்து போகின்றோம் என்ற காரணமே தெரியாமல் பரம்பரை வழக்கமாக எறும்பினம் ஆக்கிக்கொண்டது. மூதாதையர் ஒரு சிறுகாரணத்தினால் சந்தர்ப்பவசத்தால் செய்தவைகளை நாமும் செய்வோம் என்று செய்துவரும் மூடநம்பிக்கையைக் காரணந்தெரியாமல் மனிதன் மட்டுமல்ல விலங்கினமும் செய்கின்றன.

10-09-1960

# கழிவு இல்லை

கரும்புத் தோட்டத்தில் கரும்பு அறுவடை முடிந்த நாள். கரும்பாலைக்குக் கட்டுக்-கட்டாக எடுத்துச் செல்லப் பட்ட கரும்புக் கட்டுக்கள் ஒரு பக்கம் குவிந்து கிடந்தன. கரும்புச்சாறு அதிகமாயுள்ள கரும்புகளை ஆலைத்தொழிலாளிகள் தெரிந்து வேறாக்-கினார்கள். அரைவாசிக்கு மேலான கரும்புக் கட்டுகள் சாறு மிகக் குறைந்தனவாகவே காணப்பட்டன. இன்றைய சமுதாயத்தில் பணமற்ற ஏழைகள் தேடுவாரற்றுக் கிடப்பது-போல, சாறில்லாத அம்மெல்லிய கரும்புக் கட்டுக்களை வெளியேயுள்ள கொட்டிலில் அடுக்கினார்கள். ஆலையின் அரைப்புக்குத் தேவையற்ற - கழிவான கரும்புகள் தானவை.

கரும்புத் தோட்ட வேலை, ஆலை வேலைகள் முடிவடைந்தன. தோட்டத் தொழிலாளர்கள் யாரும் அங்கில்லை. ஆனால் தமக்கேற்றபடி சாற்றைப் பெற்றுள்ள அக்-கரும்புக்கட்டுக்கள் கழிவுகளாகவே அக்-கொட்டிலில் கிடந்து வாடின. நாட்களும் சுழன்றோடின. ஆலைத் தொழிலாளர்கள்தான் அக்கரும்புக் கட்டுக்களைக் கழித்தனர். ஆனால் உலகை விட்டு அவைகள் கழிந்து

போகவில்லை. எறும்புப்படை எங்கிருந்தோ வந்து கரும்புச் சாற்றை மட்டுமல்ல கரும்புக் கட்டுக்களையே உணவாக்கிக் கொண்டது. "கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு எங்கிருந்தும் வரும்" என்ற பழமொழி பொய்த்தா விடும்?

ஒக்டோபர் - 1961

# குறை

கோடைகால அனல், உஷ்ண ஆக்ரோச வெறியுடன் பூமியெங்கும் பரவிற்று. பள்ளங்களில் ஒட்டிக்கிடந்த தண்ணீரே வற்றி ஈரமற்ற வெடிப்பு நிலமாக மாறிவிட்டது. அந்தக் குட்டையும் அதே நிலைதான். அதனருகே மலையூற்றுப்பெற்று ஓடிவரும் ஆறு. தண்ணீர் குறைந்து காணப்பட்டாலும் தண்ணீர் ஓட்டத்தை நிறுத்திக்கொள்ளவில்லை. ஆற்றில் மீன்கள் பெரு மீன்கள் ஓடியாடி வாழ்வை நடாத்தின.

மாரிகால ஆரம்பநிலை. ஆகாயமெங்கும் கருமுகில் ஆட்சி; குளிர்காற்றுப் பிரவேசம். "சோ!" என இருநாள் கொட்டிய மழை. ஆறும் தண்ணீர் கூடிப் பெருகிற்று.

"ரின்ரின் ரின்.... ம்மோக்" குட்டையிலிருந்து வரும் தலையிடிச்சத்தம். தண்ணீரைக் கண்ட ஆனந்தப் பெருக்கு தவளைச் சத்தம் மேலிட்டது. காணாமல் கண்ட பெருமிதம். ஆனால் பக்கத்து ஆற்றில் வாழும் மீன்கள் சத்தத்தின் தலையிடியால் அங்கலாய்த்தன.

16-03-1962

# ஒன்றுதான் : பகுத்ததில் பல ருசி

ஆறுபேர் வளைத்தமர்ந்து உண்பதற்காகவே அந்தச் "சஹனில்" சோற்றையும் கறியையும் குவித்திருக்கிறார்கள். கோழியை உடைத்து ஆறாகப் பகிர்ந்து சோற்றின் அருகே வளைத்து வைத்திருக்கிறார்கள். கத்தரிக்களியா ஒரு பக்கம், கிறீன்பீஸ் - பச்சைக்கடலைக்கறி ஒருபக்கம், உருளைக்கிழங்குக்கறி ஒருபக்கம், அச்சாறு ஒரு பக்கம், அவியல் ஒருபக்கம் இன்னும் பல கறிகளும் சோற்றுக் குவியலின் அடியில் சுற்றி வளைத்து வைத்துள்ளனர். ஆட்டிறைச்சிக் கறியும் சூப்பும் கோப்பையில் வைத்துப் பக்கத்தில் வைத்திருக்கிறார்கள். தங்கப் பஷ்பம் சோற்றுக் குவியலின் மேலே பரப்பி ஊற்றியிருக்கிறார்கள்.

ஆறுபேர் வளைத்தமர்ந்து விட்டனர். அள்ளிப்பிசைந்து சாப்பிடுவதை விட்டு, ஆட்டிறைச்சியை அள்ளிப் போட்டு அவரவர் இருந்த இடத்தின் பக்கமிருந்த சோற்றைக் கறியுடன் அள்ளி எண்ணெய்த்தாளில் போட்டுச் சுருட்டிக் கட்டினர். அவரவர் எழுந்து செல்ல எத்தனித்தபோது, "நில்லுங்கள் ஆறு பேரும் என்னைக் குடித்துவிட்டுப் போங்கள்" என்று சத்தமிட்டது சூப் கோப்பை. அவர்கள்

அடிபணிந்து சூப்பைக் குடித்தனர். சுருட்டிக்கட்டிய இடத்திலுள்ள ஒவ்வொரு கறியும், "சேர்த்துச் சுவைக்-காமல் பகுதி பகுதியாய் எடுத்துச் சுருட்டிக் கொண்-டீர்களே" எனச் சத்தமிட்டன. எவ்வித சத்தமுமில்லாமல் அறுவரும் எழுந்து நடையைக் கட்டினர். அள்ளிய கறி-யுடன் சேர்ந்த உணவை வீட்டிலே உண்டனர். ருசி அந்த உணவுடன் சேர்ந்த கறியுடனானது.

மறுநாள் ஆறுபேர் சந்தித்த இடத்தில் அவரவர் அள்ளிய கறியின் ருசியுடன் முழுச் சோற்றையும் கறியையும் பற்றி விமர்சனம் செய்தனர். "அப்படியா? நீ சொல்லும் ருசி நானுண்டதில் காணவில்லையே" என்று ஒவ்வொருவரும் கூறி அங்க லாய்த்தனர். ஒன்றின் ஒருமித்த உணர்வு பிரிந்ததில் இல்லை என்ற உணர்வு எழுந்து நின்றது. அறுவர் பிரித்த கறியின் ருசியை வைத்தே அவரவர் உண்ட உணவை எடை போட்ட சங்கதி விளங்கலாயிற்று. ஒன்றாய்ப் பிசைந்து உண்ணும் உணவைப் பிரித்துப் பகுதியாய் ருசித்த நிலையில் ஒன்று இதுதான் என்று நினைத்தது தவறென உணர்ந்தனர்.

ஒன்றிலுள்ள மொத்த ருசியினைப் பற்றி, பிரிந்தவர் உண்ட ருசிதான் என்பதில் மிகைத்துக்கூறிப் பிரிந்து விட்டனர். ஒன்றிலுள்ள மொத்த ருசியினைப் பிரித்ததால், தானுண்ட ருசியே சஹனிலுள்ள உணவின் ருசியென நினைத்து மருண்டனர். மருட்சியால் ஒன்று பிரிந்து பலவாகிய நிலையே இப்படி..!

2006

சஹன் - பாத்திரம்

களியா- வாழைக்காய், கத்தரிக்காய் வரட்டிச் சேர்த்த கறி.

# அவரவர் நிறம்

சமாதான நிறத்தைச்சார்ந்து நின்றதால், அரசின் உறவு அற்பமாய்க் கிடைத்தது. சில மேற்பார்வைகளையும், ஆக்கங்களையும் விரிவுடன் செய்யும் பொறுப்பைத் தருமாறு அரசை வேண்டினர் சமாதான விரும்பிகள். அவர்களது இடப்பகுதியை மிக அவசரமாக அபிவிருத்தியாக்கித் தருவார்கள் என்பதனாலே பல கோடிக்குரிய அபிவிருத்திப் பணியை அவர்கள் கையில் அரசே அர்ப்பணித்தது.

காலத்தைக் கடக்க வைத்துப் பொறியியலாளர்களைப் பொறிக்குள்ளாக்கி மேற்பார்வை செய்த உறுதியைக் கேட்டனர். எப்படிக் கொடுப்பர்? ஆயுத முனையில் பொறியியலாளரைக் கடத்தி உறுதியைப் பெற்று கோடிக்கணக்கினை அபகரித்தனர்.

இரவில் ஒரு நிறம் பகலில் ஒரு நிறம் காட்டும் மாணிக்கக் கல்லது. நிறம் காட்டும் நேசத்தால் தோறமல்லி, வைடூரியம், எமரல் எனும் பச்சை, குஞ்சி குறுமன் கற்களையெல்லாம் தன்பக்கமாக்கி வாழ்வை நடத்தி ஆட்சி செய்தது. பகலில் காட்டும் பச்சை நிறம் பலரைக் கவர்ந்தது. இரவில் காட்டும் சிவப்பு

நிறம் இன்னும் பலரைக் கவர்ந்தது. அதன் ஆட்சியில் பலவர்ணங்கள் சேர்ந்து இறுகின.

அலெக்சாண்டரும் அவரது நண்பரும் மாணிக்கம் தேடி வந்தபோதுதான் பச்சைக் கல்லின் பரவசம் ஈர்த்தது. மரகதம் என்று மகிழ்ச்சி கொண்டனர். இருவரும் பங்குதாரராய் அப்பெரிய பச்சைக் கல்லுக்குப் பணம் கொடுத்தனர். நம்பிக்கையாளர் அலெக்சாண்டர் கையில் அக்கல்லிருந்தது, அன்றிரவு நண்பர் அலெக்சாண்டரையும் கல்லையும் பார்க்க அவரது வீடு சென்றார். கதையுடன் கதையாய்க் கல்லைப் பார்ப்போம்" நண்பர் கூறினார். அலெக்சாண்டர் கல்லை நண்பர் கையில் வைத்தார். என்ன ஆச்சரியம் பச்சைக் கல் சிவப்பு நிறம் காட்டியது. நண்பர் அலெக்சாண்டரைச் சந்தேகித்தார். கல்காட்டும் கபடத்தை அறியாத நண்பர்களிடையே சந்தேகம் வலுத்தது. உடனே, நண்பர்கள் எதிரிகளாகினர். வஞ்சகம் செய்ததாக அலெக்சாண்டர்மீது அபார பழி சுமத்தினார் நண்பர், அலெக்சாண்டரைச் கொல்லாமல் கொல்லுமளவு திட்டித் தீர்த்தார். ஆத்திரத்தில் இடத்திலிருந்து அகன்றார்.

காலையானதும் "கல்" வேறு நிறம் காட்டியது. நண்பரிடம் கல்லை எடுத்துச் சென்று இரவு இது காட்டும் நிறம் வேறு, பகலில் காட்டும் நிறம் வேறு என விவரித்தார் அலெக்சாண்டர். நண்பர் இரவில் நடந்த சண்டையை எண்ணி வருந்தினார். வெட்கித்த நண்பர் "அலெக்சாண்டர் இஸ் றைட்" என்றார். பசும்கல்லுக்கு உலகளாவிய பெயர் "அலெக்சாண்டர் இஸ் றைட்" எனவாகியது.

-2006

இக்பால் கவிதையில் சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர் என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம். கவிஞராக அறியப்பட்ட அளவுக்கு இக்பால் ஒரு சிறுகதை எழுத்தாளராக அறியப்படவில்லை. கவிஞர் இக்பால் என்ற அடைமொழியுடனேயே இவர் பிரபல்யம் பெற்றிருப்பது இதற்கு ஒரு காரணம் எனலாம். இக்பாலின் கவிதைகளை விட அவருடைய சிறுகதைகள் எனக்கு மிகவும் பிடித்தமானவை. மாயத்தோற்றம் (1998) தொகுதியில் அவரது ஒன்பது சிறுகதைகள்தான் இடம்பெற்றுள்ளன. சிறுகதை வடிவத்தில் அவருக்குள்ள தேர்ச்சியை இக்கதைகள் காட்டுகின்றன. அவரது ஏனைய கதைகளும் விரைவில் நூல் உருப்பெற வேண்டும்.

பேராசிரியர்
எம். ஏ. நு்.மான்.

ISBN 978-955-96735-1-4

"காவியம் போன்று நன்கு வளர்ச்சி பெற்ற குறியீடான உருவக குறியீட்டுக் கதையின் இன்றைய வளர்ச்சி போதாதது. இக்கதைகளுக்கு முன்னோடியான ஈஸாப் கதைகள் இறுதியில் கருத்துரை வழங்கிக் கருகி விட்டன. ருஷ்ய எழுத்தாளரான ஸோலோகோவ், அரேபிய எழுத்தாளரான கலீல் கிப்ரான் போன்றோரது குறியீட்டுக் கதைகள் வரலாற்றில் உயர்ந்து நிற்கின்றன. வாழ்க்கையின் மதிப்பை மிக உன்னதமாய் உயர்த்தி நிற்கின்றன."